1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் செலான் வங்கி பிஎல்சி பணிப்பாளர் சபையினால் 2007.05.24 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"இல. 300, ஐ.டி.எச். வீதி, கொலன்னாவையில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளதும் N(PVS) 30106 என்ற பதிவிலக்கம் கொண்டதாக உரிய முறையில் கூட்டிணைக் கப்பட்டதுமான ஒரு கம்பனியான ஏ. சி. ஃபூட்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் 'கடனெடுத்தவர்' என்ற வகையில் செலான் வங்கி பிஎல்சியின் சார்பில் பிரசித்த நொத்தாரிசு எஸ். குகாதரன் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004.10.26 ஆந் தேதிய 635 ஆம் இலக்க முறியின்மீது வருமதியான கொடுப்பனவுத் தவணை தவறியுள்ளார். ஆதலால் இப்பொழுது 2006, திசெம்பர் 31 ஆந் தேதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறியின்மீது ஒரு கோடி இருபத்துமூன்று இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து எழுநூற்றுப் பன்னிரண்டு ரூபா அறுபத்து நான்கு சதம் (ரூபா 1,23,46,712.64) செலான் வங்கி பிஎல்சிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 1,23.46,712.64 பணத்தொகையையும் 2007, சனவரி 01 ஆந் தேதி முதல்

விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு முப்பது மூன்று சதவீதப்படி (33%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பன வுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 635 ஆம் இலக்க முறியினால் செலான் வங்கி பிஎல்சிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனமும் வளவும் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஐ. டபிள்யு.ஜயசூரிய என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டும் என செலான் வங்கி பிஎல்சி பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது".

### முதலாம் அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் அளுத்குறு கோறளே தெற்கில் அம்பதலென்பஹலவில் கொலன்னாவ நகர சபை எல்லைகளினுள் எகொட கொலன்னாவையில் அமைந்துள்ளதும் இல. 68, (பகுதி) விஜய வீதி என்ற வரி மதிப்பீட்டிலக்கம் கொண்டதும் 'லியனகஹவத்த' மற்றும் 'தெல்கஹவத்த' என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. ஏ. ரூபசிங்கவால் தயாரிக்கப்பட்ட 1925.11.03 ஆந் திகதிய 418 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 6 எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டடங்கள், இயந்திரங்கள், துணைக்கருவிகள் மற்றும் பொருத்திகள், மரங்கள், தோப்புகள் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு 6 இன் எல்லைகள் – வடக்கு : முடிக்குரிய காணி ; கிழக்கு : பாதை ; தெற்கு : துண்டு 5 ; மேற்கு : துண்டு 7. மேலே சொல்லப்பட்ட 418 ஆம் இலக்க வரைபடத்தின்படி பூச்சியம் ஏக்கர் ஒரு றூட் பதினெட்டு தசம் ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 18.5பே.) விஸ்தீரணமுள்ள இது கொழும்பு மாவட்டக் காணிப்பதிவகத்தில் பி/903/12 ஆம் உரித்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### இரண்டாம் அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தின் அளுத்குறு கோறளை தெற்கில் அம்பதலென்பஹலவில் கொலன்னாவ நகர சபை எல்லைகளினுள் எகொட கொலன்னாவையில் அமைந்துள்ள 'லியனகஹவத்த' மற்றும் 'தெல்கஹவத்த' என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. ஏ. ரூபசிங்கவால் தாயாரிக்கப்பட்ட 1952.11.03 ஆந் திகதிய 418 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 7 (ஒரு வீதிக்கான ஒதுக்கம்) எனக்குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும் சொல்லப்பட்ட துண்டு 7 இன் எல்லைகள்– வடக்கு : விஜய வீதி ; கிழக்கு : துண்டுகள் 6, 5 மற்றும் 4 ; தெற்கு : துண்டு 4 ; மேற்கு ; துண்டுகள், 3, 2 மற்றும் 1. மேலே சொல்லப்பட்ட 418 ஆம் இலக்க வரைபடத்தின்படி பதினேழு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 17பே.) விஸ்தீரணமுள்ள இது கொழும்பு மாவட்டக் காணிப்பதிவகத்தில் பி 890/46 ஆம் உரித்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ. கொட்டிகல,
சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர்–சட்டம்.

7-67

### வரையறுக்கப்பட்ட செலான் வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ், வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்*

கணக்கு இல. : 0270-747377-001 (ஜா-எல கிளை)

1990 ஆம் அண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ், வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபையினால் 05.03.2007 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"கொழும்பு 12 இல் N (PVS) 9296 என்ற பதிவிலக்கம் கொண்டதாக 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கைக் குடியரசில் உரியமுறையில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனியான உபாலி கார்மன்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட் 'கடனெடுத்தவர்' என்ற வகையில் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் சார்பில் பிரசித்த நொத்தாரிசு எஸ். சீ. ரணவீர என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1997, நவெம்பர் 24 ஆந் தேதிய 3051 ஆம் இலக்க மற்றும் 1997, திசெம்பர் 1 ஆந் தேதிய 3058 ஆம் இலக்க முறிகளின்மீது வருமதியான கொடுப்பனவுத் தவணை தவறியுள்ளார். ஆதலால், இப்பொழுது 2006, யூலை 31 ஆந் தேதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிகளின்மீது இரண்டு கோடி இருபத்தெட்டு இலட்சத்து அறுபத்து நான்காயிரத்து முந்நூற்றுத் தொண்ணூற்று நான்கு ரூபா ஐம்பத்தி இரண்டு சதம் (ரூபா 2,28,64,394.52) வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 2,28,64,394.52 பணத்தொகையையும் 2006, ஓகத்து 1 ஆந் தேதி முதல் விற்பனைத் தேதி வரை ஆண்டொன்றுக்கு முப்பத்து மூன்று சதவீதப்படி (33%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 3051 மற்றும் 3058 ஆம் இலக்க முறிகளால் வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனமும் வளவும் உத்தரவு பெற்ற ஏலதாரர் திரு. ஐ. டபிள்யு. ஜயசூரிய என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப் பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், சல்பிட்டி கோறளேயின் பள்ளே பத்துவில் கொழும்பு மாநகர சபையின் நிருவாக எல்லைகளினுள் வட்டார இல. 12, நியு பஸாரில் அமைந்துள்ளதும், இல. 568/25 (பகுதி) ஸ்ரீ சுமனதிஸ்ஸ மாவத்த (முன்னர் ஸ்ரீ சங்கராஜ மாவத்த என்றறியப்பட்டது) என்ற வரிமதிப்பீட்டிலக்கம் கொண்டதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. சின்னத்தம்பி என்பவரால் தயாரிக்கப்பட்ட 1988.07.30 ஆந் தேதிய 2097 ஆம் இலக்க

வரைபடத்தில் துண்டு X எனக் குறிக்கப்பட்டதுமான காணிப்பங்கீடு அதன்கண் அமைந்துள்ள கட்டடம், தோப்புகளுடன் சேர்த்து. இதன் எல்லைகள் - வடக்கு : இல. G98, கிரான்ட்பாஸ் வீதி என்ற வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட வளவு ; கிழக்கு : இல. 104, கிரான்ட்பாஸ் வீதி என்ற வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட வளவு ; தெற்கு : துண்டு H ஸ்ரீ சுமனதிஸ்ஸ மாவத்தையிலிருந்து (40 அடி அகல) தனியார் வீதி ; மேற்கு : துண்டு G2E. இருபது தசம் மூன்று ஆறு பேர்ச்சஸ் (0ஏ.0றூ.20.36பே.) விஸ்தீரணமுள்ளது. இது கொழும்பு காணிப்பதிவகத்தில் தொகுதி/ பக்கம் A 943/49, 50 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ. கொட்டிகல,
சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் சட்டம்.

7-66

---

## வரையறுக்கப்பட்ட செலான் வங்கி

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ், வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. : 9911-089882-001 (வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் அலகு கிளை)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ், வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபையினால் 16.04.2007 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"கொழும்பு 11 இல் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தையும் N(PVS) 5213 என்ற பதவிலக்கத்தையும் கொண்டதாக 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் உரியமுறையில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனியான திருவாளர்கள் "கொஸ்மஸ் மக்கி இன்டஸ்றீஸ் லிமிட்டெட்" 'கடனெடுத்தவர்' என்ற வகையில் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் சார்பில் பிரசித்த நொத்தாரிசு எம். ஈ. எஸ். பீரிஸ் என்பவரால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 1999.07.09 ஆந் தேதிய 1910, இயந்திரங்கள்மீது 1999.06.24 ஆந் தேதிய FCBU/ MM/ 990003 மற்றும் 2003.12.31 ஆந் தேதிய FCBU/SM/ 03/ 021 ஆம் இலக்க முறிகளின்மீது வருமதியான கொடுப்பனவுத் தவணை தவறியுள்ளார். ஆதலால், இப்பொழுது 2004, சனவரி 30 ஆந் தேதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிகளின்மீது யூஎஸ் டொலர் இரண்டு இலட்சத்துத் தொண்ணூற்றொன்பதாயிரத்து இருபத்தேழு சதம் எண்பத்தெட்டு (யூஎஸ் $ 2,99,027.88) வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு உரியதாகச் செலுத்தப்படவேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட யூஎஸ் $ 2,99,027.88 பணத்தொகையையும் 2004, சனவரி 31 ஆந் தேதி முதல் விற்பனைத் தேதிவரை ஆண்டொன்றுக்கு ஒன்பது சதவீதப்படி (9%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 1910, FCBU/MM/ 990003 மற்றும் FCBU/ SM/ 03/ 021 ஆம் இலக்க முறிகளினால் வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு ஈடுவைக்கப் பட்டதும் இதற்கான அட்டவணைகளில் மேலும் விபரிக்கப்படுவதுமான ஆதனமும வளவும் இயந்திரங்களும் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஐ. டபிள்யு. ஜயசூரிய என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டுமென வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

#### முதலாவது அட்டவணை

இனம் 1 :- மேல் மாகாணம் கம்பஹா மாவட்டத்தில் நீர்கொழும்பு பதிவுப் பிரிவில் தாசியபத்துவவில் கம்பஹா மாவட்ட அபிவிருத்திச் சபையின் கட்டுநாயக்க சீதுவ உப அலுவலகத்தினுள் கதிரான தெற்கு கிராமத்தில் அமைந்துள்ள (வரைவு இல. ஜீசீஈசீ/ ஐபீஇஸட்/ கே/ 003 இல் காட்டப்பட்ட கட்டம் 1 அமைப்புத்திட்ட வரைபடத்தில் கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழு முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் கட்டுநாயக்கவில் துண்டு சீஎம்ஜஎல் எனக் காட்டப்பட்ட காணியின் நில அளவையும் உட்பிரிவுமாயுள்ள) கதிரானவத்த என்றழைக்கப்படும் காணி தொடர்பில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. சின்னத்தம்பி என்பவரால் தயாரிக்கப்பட்ட 1985, யூலை 12 ஆந் தேதிய 1230 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிக்கப்பட்ட காணிப் பங்கீடு முழுவதும். சொல்லப்பட்ட துண்டு 1 இன் எல்லைகள் - வடக்கு : கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணி மற்றும் இதனுடையதாக துண்டு 3 (5 மீட்டர் அகல வீதி ஒதுக்கல்) ; கிழக்கு : இதனுடையதாக துண்டு 2 ; தெற்கு : கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணி மற்றும் இதனுடையதாக துண்டு 3 (5 மீட்டர் அகல வீதி ஒதுக்கல்) மேற்கு சுற்று வீதி 11 மற்றும் ஒதுக்கல் சொல்லப்பட்ட 1230 ஆம் இலக்க வரைபடத்தின்படி இது ஒரு ஏக்கர் இரண்டு றூட் பத்து தசம் இரண்டு பேர்ச்சஸ் (1ஏ.2றூ.10.2பே.) விஸ்தீரணமுள்ளது.

மேலே சொல்லப்பட்ட வரைபடம் இல. 1230 இல் சொல்லப்பட்ட துண்டு 1 பின்வரும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்ட ஒரு பகுதியாகும் :-

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், நீர்கொழும்பு பதிவுப் பிரிவு தாசிய பத்துவில் கட்டுநாயக்க சீதுவ பட்டின சபை எல்லைகளினுள் கதிரான தெற்குக் கிராமத்தில் அமைந்துள்ள கதிரான வத்த என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் வரைவு இல. ஜீசீஈசீ/ஐபீஇஸட்/ கே/ 003 இல் காட்டப்பட்ட கட்டம் 1 அமைப்புத்திட்ட வரைபடத்தில் கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழு முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் கட்டுநாயக்கவில் 'சீஎம்ஜஎல்' எனக் குறிக்கப்பட்ட காணிப் பங்கீடு முழுவதும். சொல்லப்பட்ட துண்டு சீஎம்ஜஎல் இன் எல்லைகள் வடகிழக்கு, தென்கிழக்கு மற்றும் தென்மேற்கு : நில அளவையாளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்ட 1978, மாச்சு 2 ஆந் தேதிய திருத்திய கேஓ/ஏ/78/26 இலக்க முன்கூட்டிய வரைபடப்படியில் கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகள் ; வடமேற்கு : சுற்று வீதி 11. சொல்லப்பட்ட ஜீசீஈசீ/ ஐபீஇஸட்/ கே/ 003 இலக்க வரைவின்படி இரண்டு ஏக்கர் இரண்டு றூட் (2ஏ.2றூ.0பே.) விஸ்தீரணமுள்ளது. இது நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் சீ 686/ 82 ஆம் உரித்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

*இனம் 2 :-* மேல் மாகாணம் கம்பஹா மாவட்டத்தில் நீர்கொழும்பு பதிவுப் பிரிவில் தாசியபத்துவவில் கம்பஹா மாவட்ட அபிவிருத்திச் சபையின் கட்டுநாயக்க-சீதுவ உப அலுவலகத்தினுள் கதிரான தெற்கு கிராமத்தில் அமைந்துள்ள (வரைவு இல. ஜீசீஈசீ/ஐபீஇஸட்/கே/003 இல் காட்டப்பட்ட கட்டம் 1 அமைப்புத்திட்ட வரைபடத்தில் கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழு முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் கட்டுநாயக்கவில் துண்டு சீஎம்ஜஎல் எனக் காட்டப்பட்ட காணியின் நில அளவையும் உட்பிரிவுமாயுள்ள) கதிரானவத்த என்றழைக்கப்படும் காணி தொடர்பில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. சின்னத்தம்பி என்பவரால் தயாரிக்கப்பட்ட 1985, யூலை 12 ஆந் தேதிய 1230 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 2 எனக் குறிக்கப்பட்ட காணிப் பங்கீடு முழுவதும். சொல்லப்பட்ட துண்டு 2 இன் எல்லைகள் - வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு : கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணி ; மேற்கு : துண்டு 1 மற்றும் 3 (5 மீட்டர் அகல வீதி ஒதுக்கல்) ஒதுக்கல். சொல்லப்பட்ட 1230 ஆம் இலக்க வரைபடத்தின்படி மூன்று றூட் பதின்மூன்று பேர்ச்சஸ் (0ஏ.3றூ.13பே.) விஸ்தீரணமுள்ளது. இது நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் சீ 626/288 ஆம் உரித்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

கீழேயுள்ளதன் மேலாகவும் கீழாகவும் ஊடாகவும் வழி உரிமைக்கான முழுமையான கட்டுப்பாடற்ற உரிமையுடனும் சுதந்திரத்துடனும் உத்தரவுடனும் பயன்படுத்துபவரின் ஏனைய எல்லா உரிமைகளுடனும் :-

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு பதிவுப் பிரிவு தாசிய பத்துவில் கம்பஹா மாவட்ட அபிவிருத்தி சபையின் கட்டுநாயக்க-சீதுவ உப அலுவலகத்தினுள் கதிரான தெற்குக் கிராமத்தில் அமைந்துள்ள (வரைவு இல. ஜீசீஈசீ/ஐபீஇஸட்/கே/003 இல் காட்டப்பட்ட கட்டம் 1 அமைப்புத்திட்ட வரைபடத்தில் கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழு முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் கட்டுநாயக்கவில் துண்டு சீஎம்ஜஎல் எனக் காட்டப்பட்ட காணியின் நில அளவையும் உட்பிரிவுமாயுள்ள) கதிரானவத்த என்றழைக்கப்படும் காணி தொடர்பில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ சின்னத்தம்பி என்பவரால் தயாரிக்கப்பட்ட 1985, யூலை 12 ஆந் தேதிய 1230 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 3 (வீதி ஒதுக்கல்) எனக் குறிக்கப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும். சொல்லப்பட்ட துண்டு 3 இன் எல்லைகள் - வடக்கு : துண்டு 1 ; கிழக்கு : துண்டு 2 ; தெற்கு : துண்டு 1 ; மேற்கு : சுற்றுவீதி 11 மற்றும் ஒதுக்கல். சொல்லப்பட்ட 1230 ஆம் இலக்க வரைபடத்தின்படி பதினாறு தசம் எட்டு பேர்ச்சஸ் (0ஏ.0றூ.16.8பே.) விஸ்தீரணமுள்ளது. இது நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் சீ 626/289 ஆம் உரித்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**இரண்டாவது அட்டவணை**

*இயந்திரத்தின் வகை*
*மாதிரி இல.*
*இயந்திரங்களின் வகை*

| *இன இல.* | *விளக்க விவரம்* | *எண்ணிக்கை* |
|---|---|---|
| தையல் இயந்திரங்கள் | | |
| பீ 2 | ஜூக்கி -357 | 12 |
| டி 1 | எம்ஓ -357 | 08 |
| ஈ 2 | எல்பீஎச் -780 | 01 |
| ஈ 3 | எல்கே- 1850 | 02 |
| ஈ 4 | டிஎஃப்பீ- 1404 | 01 |

| *இன இல.* | *விளக்க விவரம்* | *தொகை* |
|---|---|---|
| ஈ6 | டிடிஎல் | 90 |
| ஈ7 | எம்ஓ-25165 | 11 |
| ஈ9 | 373 | 01 |
| ஈ10 | எல்கே-1850 | 03 |
| ஈ16 | டிடிஎல்-555 | 11 |
| ஈ17 | எல்எச் - 515 | 16 |
| ஜீ1 | எம்ஓ - 747 | 07 |
| கே1 | எம்ஓ - 2366ஈ | 08 |
| கே2 | பீ -832 | 06 |
| கே6 | எல்எச் -162 | 02 |
| கே13 | பீ 8423 | 06 |
| எல்2 | ஃபீட்ரீ2 -240 | 19 |
| எல்3 | பீ 832 | 20 |
| என்5 | டிரீ2 - பீ925 | 10 |
| என்7 | டிஎல்கே - 800 | 23 |
| பீ3 | எல்கே - 1850 | 05 |
| பீ4 | டிஎன்எஃப்- 500 | 29 |
| பீ5 | டிஎன்றி-860 | 01 |
| பீ6 | எல்ரீ2-240 | 09 |
| தையல் இயந்திரங்கள் | | |
| எஸ்1 | பீடி2-எச்310 | 20 |
| எஸ்2 | கேஎம்-506 | 5 |
| ரீ1 | எல்கே3-பீ434ஈஎக்ஸ் | 3 |
| வேறு இனங்கள் | | |
| ஏ9 | மெட்டல் பட்டன் பிறஸ் | 10 |
| பீ1 | ஸ்டிரப்பிங் மெஷின் | 1 |
| பீ6 | பட்டன் பிறெஸ் | 5 |
| சீ1 | மின்பிறப்பாக்கி | 1 |
| ஜே3 | ஃபியூசிங் மெஷின் | 1 |
| கே5 | அண்டர் டிரிம்மிங் அவுட்டிங் ஸ்ரிச் | 4 |
| கே11 | ஈஸ்றமன் கட்டிங் | 2 |
| எல்5 | பான்ட் நைஃப் மெஷின் | 1 |
| கியூ1 | கட்டிங் மெஷின் | 1 |
| ஆர் 1 | டீசல் கொதிகலம் | 1 |
| ரீ3 | டீசல் கொதிகலம் | 1 |

**மூன்றாவது அட்டவணை**

மூலப்பொருள்கள், துணைப் பொருள்கள், நடைபெறும் வேலை, பூர்த்தியான பண்டங்கள் என்பவற்றைக் கொண்டதான கையிருப்புச் சரக்குகள், பொருள்கள், பூர்த்தியான மற்றும் பூர்த்தியாகாத பண்டங்கள், இயந்திரங்கள், சாதனங்கள், உடைமைகள் மற்றும் சொத்துக்கள் மொத்தமாகவும் தனித்தனியாகவும் எல்லாஞ் சேர்த்து.

மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தினுள்-

(1) இல. 241, லெயாட்ஸ் புறோட்வே, கொழும்பு 14
(2) இல. 80, மகாவித்தியாலய மாவத்தை, கொழும்பு 13

மற்றும்

மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்தினுள்–

(3) இல. 01, றிங் வீதி, முதலீட்டு ஊக்குவிப்பு வலயம், கட்டுநாயக்க என்ற வரி மதிப்பீட்டிலக்கங்கள் கொண்ட வளவுகளில் உள்ளனவும் அவற்றின்கண் அமைந்துள்ளனவுமான மூலப்பொருள்கள் மற்றும் துணைப் பொருள்கள்

நடைபெறும் வேலை

பூர்த்தியான பண்டங்கள்

மற்றும் ஏனைய எல்லா உருப்படிகளும் தளபாடம், பொருத்திகள் மற்றும் சொத்துக்களும் எவ்விதத்திலேனும் விவரிக்கப்படும் எல்லா வகையான ஏனைய அசைவுள்ள ஆதனங்களும் மொத்தமாகவும் தனித்தனியாகவும் எல்லாஞ் சேர்த்து. (இவை எல்லாம் இதனகத்துப் பின்னர் கூட்டாக "கடன் பெற்றவரின் கையிருப்புச் சரக்குகள், பொருள், பூர்த்தியான மற்றும் பூர்த்தியாகாத பண்டங்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்).

அத்துடன் மேலே சொல்லப்பட்ட மாவட்டத்தில் மேற்படி கடன் பெற்றவர் இப்போது அல்லது இதன் பின்னர் எவ்வேளையிலும் காலத்திற்குக் காலமும் வியாபாரத்தைக் கொண்டு நடத்துகின்ற அல்லது இதன் பின்னர் இவ்வாவணத்தின் தொடர்ச்சிக் காலம் வரை கடன் பெற்றவர் காலத்திற்குக் காலமும் எவ்வேளையிலும் கடன் பெற்றவரின் கையிருப்புச் சரக்குகள், பொருள்கள், பூர்த்தியான மற்றும் பூர்தியாகாத பண்டங்கள் உடைமைகள் மற்றும் எவ்விதத்திலேனும் விவரிக்கப்படும் எல்லா வகையான ஏனைய அசைவுள்ள ஆதனங்களும் கொண்டுவந்து வைக்கப்படும் எல்லாக் கிட்டங்கிகளில் களஞ்சியங்களில் மற்றும் வளவுகளில் அல்லது கடன் பெற்றவரின் கையிருப்புச் சரக்குகள், பொருள்கள், பூர்த்தியான மற்றும் பூர்த்தியாகாத பண்டங்கள், உடைமைகள் மற்றும் ஏனைய அசைவுள்ள ஆதனங்கள் கடன் பெற்றவரால் இதன் பின்னர் எவ்வேளையிலும் காலத்திற்குக் காலமும் அகற்றிச் செல்லப்பட்டு வியாபாரத்தை அல்லது வர்த்தகத்தை அல்லது களஞ்சியத்தை நடத்துகின்ற வேறு ஏதேனும் இடத்தில் அல்லது இடங்களில் உள்ளனவும் அவற்றின்கண் அமைந்துள்ளனவும்.

II

மூலப்பொருள்கள் மற்றும் துணைப் பொருள்கள்
நடைபெறும் வேலை
பூர்த்தியான பண்டங்கள்

என்பவற்றைக் கொண்ட பொருள்கள், இயந்திரங்கள், சாதனங்கள் மற்றும் ஏனைய எல்லா வகையான பண்டங்களும் மொத்தமாகவும் தனித்தனியாகவும் எல்லாஞ் சேர்த்து.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்ட மற்றும் மாநகர சபை எல்லைகளினுள், கொழும்புத் துறைமுகததிலுள்ள கப்பல்துறை மேடைகள் மற்றும் பண்டகசாலைகளில் உள்ளனவான (இவையெல்லாம் இதனகத்துப் பின்னர் கூட்டாக "கடன் பெற்றவரின் துறைமுகப் பொருள்களும் பண்டங்களும்" எனக் குறிப்பீடு செய்யப்படும்)

III

மூலப்பொருள்கள் மற்றும் துணைப் பொருள்கள்
நடைபெறும் வேலை
பூர்த்தியான பண்டங்கள்

என்பவற்றைக் கொண்ட பொருள்கள், இயந்திரங்கள், சாதனங்கள் மற்றும் ஏனைய எல்லா வகையான பண்டங்களும் மொத்தமாகவும் தனித்தனியாகவும் எல்லாஞ் சேர்த்து.

மேல் மாகாணம், நீர்கொழும்பு மாவட்டத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்திலுள்ள களஞ்சியங்களிலும் பண்டகசாலைகளிலும் உள்ளனவான (இவையெல்லாம் இதனகத்துப் பின்னர் கூட்டாக "கடன் பெற்றவரின் விமான நிலையப் பொருள்களும் பண்டங்களும்" எனக் குறிப்பீடு செய்யப்படும்)

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ. கொட்டிகல,
சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் சட்டம்.

7-68

---

### வரையறுக்கப்பட்ட செலான் வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ், வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்*

கணக்கு இல. : 0380-1232990-001 (மாத்தளை கிளை)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ், வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபையினால் 16.04.2007 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"மாத்தளையைச் சேர்ந்த அப்துல் அஸீஸ் மொஹமட் சுல்தான் என்பவர் "கடனெடுத்தவர்" என்ற வகையில் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் சார்பில் பிரசித்த நொத்தாரிசு எஸ். பரம்சோதி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2003, திசெம்பர் 11 ஆந் தேதிய 1306, 1308 மற்றும் 1310 ஆம் இலக்க முறிகளின்மீது வருமதியான கொடுப்பனவுத் தவணை தவறியுள்ளார். ஆதலால், இப்பொழுது 2006, ஏப்பிறல் 17 ஆந் தேதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிகளின்மீது இருபத்தாறு இலட்சத்து ஆறாயிரத்து எழுநூற்றைம்பத்தைந்து ரூபா தொண்ணூற்றிரண்டு சதம் (ரூபா 26,06,755.92) வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு உரியதாகச் செலுத்தப்படவேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 26,06,755.92 பணத் தொகையையும் 2006, ஏப்பிறல் 18 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு முப்பத்து மூன்று சதவீதப்படி (33%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 1306, 1308 மற்றும் 1310 ஆம் இலக்க முறிகளினால் வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான முதலாம், இரண்டாம், மூன்றாம் அட்டவணைகளில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனங்கள் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஐ. டபிள்யு. ஜயசூரிய என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டுமென வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபை 1990 ஆம்

ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

### முதலாம் அட்டவணை

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டத்தில் மாத்தறை தெற்கின் கம்பஹறீயபத்துவில் உடுகமவில் அமைந்துள்ள "நிக்கவெல எஸ்ரேட்" என்றழைக்கப்படும் காணி தொடர்பில் மாத்தளையைச் சேர்ந்த உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். ராஜசேகரனால் தயாரிக்கப்பட்ட 2000.12.10 ஆந் தேதிய 5272 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டுகள் 1 முதல் 8 எனக் காட்டப்பட்ட தொடர்ச்சியான காணிப் பங்கீடுகள் எல்லாம் அவற்றின்கண் அமைந்துள்ள எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட வரைபடத்தின்படி அதன் எல்லைகள் – வடகிழக்கு : பிரதான வீதிக்கான எஸ்ரேட் வீதி ; வடக்கு : அதே காணியின் எஞ்சிய பகுதி ; தென்மேற்கு : வடிகால் மேற்கு எஸ்ரேட் வீதி இது மூன்று றூட் இருபத்தேழு தசம் ஐந்து பூச்சியம் பேர்ச்சஸ் (00ஏ.3றூ.27.50பே.) கூட்டு விஸ்தீரணமுள்ளது.

### இரண்டாம் அட்டவணை

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டத்தில் மாத்தறை தெற்கின் கம்பஹறீயபத்துவில் உடுகமவில் அமைந்துள்ள "நிக்கவெல எஸ்ரேட்" என்றழைக்கப்படும் காணி தொடர்பில் மாத்தளையைச் சேர்ந்த உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். ராஜசேகரனால் தயாரிக்கப்பட்ட 2000.12.13 ஆந் தேதிய 5273 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டுகள் 1 முதல் 8 மற்றும் 10 முதல் 11 எனக் காட்டப்பட்ட தொடர்ச்சியான காணிப் பங்கீடுகள் எல்லாம் அவற்றின்கண் அமைந்துள்ள எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட வரைபடத்தின்படி அதன் எல்லைகள் – வடக்கு : அதே காணியின் எஞ்சிய பகுதி ; தெற்கு மற்றும் தென்கிழக்கு : சொல்லப்பட்ட வரைபடத்தின் துண்டு 9, எஸ்ரேட் வீதி மற்றும் அதே காணியின் எஞ்சிய பகுதி தென்மேற்கு மற்றும் மேற்கு எஸ்ரேட் வீதி இது மூன்று றூட் பதினைந்து தசம் ஐந்து பூச்சியம் பேர்ச்சஸ் (00ஏ.3றூ.15.50பே.) கூட்டு விஸ்தீரணமுள்ளது.

### மூன்றாம் அட்டவணை

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டத்தில் மாத்தறை தெற்கின் கம்பஹறீயபத்துவில் உடுகமவில் அமைந்துள்ள "நிக்கவெல எஸ்ரேட்" என்றழைக்கப்படும் காணி தொடர்பில் மாத்தளையைச் சேர்ந்த உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். ராஜசேகரனால் தயாரிக்கப்பட்ட 2000.12.19 ஆந் தேதிய 5274 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டுகள் 1 முதல் 4 எனக் காட்டப்பட்ட தொடர்ச்சியான காணிப் பங்கீடுகள் எல்லாம் அவற்றின்கண் அமைந்துள்ள எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட வரைபடத்தின்படி அதன் எல்லைகள் – வடகிழக்கு : வடிகால் ; தெற்கு, தென்கிழக்கு மற்றும் தென்மேற்கு : எஸ்ரேட் வீதி இது ஒரு றூட் இருபத்தாறு தசம் ஆறு பூச்சியம் பேர்ச்சஸ் (00ஏ.1றூ.26.60பே.) கூட்டு விஸ்தீரணமுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ. கொட்டிகல,
சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் சட்டம்.

7-69

### மக்கள் வங்கி—தங்கொட்டுவ கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 2006.05.19 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"மாறவிலை பிரசித்த நொத்தாரிசு திருமதி ருவினி ஏ. எஸ். தஸநாயகா என்பவரினால் அத்தாடசிப்படுத்தப்பட்ட 2005.08.23 ஆந் திகதிய 3055 ஆம் இலக்கத்தையுடைய அடைவுச்சீட்டின் பிரகாரம் கொடுப்பனவு கும்பலாதர ஆரச்சிலாகே தொன் மஹேஷ் குமார் பொத்தவில சக கும்பலாதர ஆரச்சிலாகே தோன அநோமா சிராமணி பொத்துவில என்பவர்கள் கடப்பாடுடையவர்களாகக் கட்டணத்தைச் செலுத்தத் தவறியதால், அவ்வடைவின் கீழ் பதின்மூன்று இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து அறுநூற்றி எழுபத்தொன்பது ரூபா தொண்ணூற்றி ஐந்து சதம் (ரூ. 13,51,679.95) மக்கள் வங்கிக்கு அறவிடப்ப வேண்டியுள்ள தாலும் மேலும் பதின்மூன்று இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து அறுநூற்றி எழுபத்தொன்பது ரூபா தொண்ணூற்றி ஐந்து சதம் (ரூ. 13,51,679.95) 2006.03.05 ஆந் திகதி முதல் வருடத்து 16.5% வீதம் ஏலவிற்பனைத் தினம் வரை மேலும் வட்டியுடனும் மக்கள் வங்கிச் சட்டத்தின் 29எல் (29L) சரத்தின் கீழ் அறவிடப்பட வேண்டிய பணம் சக கட்டணத்துடன் சக ஏதாவது கட்டணம் கிடைத்திருப்பின், அவைகள் குறைக்கப்பட்டு, குறிப்பிட்ட பதின்மூன்று இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து அறுநூற்றி எழுத்தொன்பது ரூபா தொண்ணூற்றி ஐந்து சதம் (ரூ. 13,51,679.95) அறவிடுவதற்காக நீர்கொழும்பு அதிகாரம்பெற்ற ஏலவிற்பனை யாளர் திரு. டப். பீ. ஸீ. பெரேரா என்பவரால் 3055 ஆம் இலக்க அடைவுச்சீட்டின் பிரகாரம் இவ்வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள சொத்தையும் வீட்டையும் பொது ஏலத்தில் விற்கப்படவேண்டும் என 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப் பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின்கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை இத்தால் தீர்மானிக்கின்றது."

### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில் மாறாவிலை காணிப் பதிவு செய்யும் பிரிவிற்குரிய தென் பிட்டிகல் கோறளையில் ஓதர பகுதியில், கிழக்கு கிறிமெட்டியான எனும் கிராமத்தில் "மீகஹவத்த" எனும் காணிக்கு அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் திரு. வை. எம். ரஞ்ஜித் யாப்பா என்பவரினால் 2001.12.11 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 7847 ஆம் இலக்க வரைபடத்திற்கிணங்க 1 ஆம் இலக்கக் காணிக்கு எல்லைகள் வடக்கில் : பிரதேச சபைப் பாதை ; கிழக்கில் : உபாலி ஜயசிங்ஹ உரிமைகோரும் காணி ; தெற்கில் : வாய்க்கால் ; மேற்கில் : இக்காணியின் மீதக்காணி ஆகிய எல்லைகள் சூழ்ந்த பூச்சியம் ஏக்கர் பூச்சியம் றூட் முப்பத்தொன்பது தசம் ஏழு பர்ச்சஸ் (0ஏ. 0றூ. 39.7பே.) விஸ்தீரணமுள்ள காணியும் அத்துடன்

மண்ணோடு சேர்த்து மரங்கள், பயிர்கள், கட்டிடங்களும் மற்றும் இக்காணியில் இருக்கும் அனைத்தும் அடங்கும். இக்காணி மாறாவிலை காணிப்பதிவுக் காரியாலயத்தில் E94/60 ஆம் இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
சிலாபம்.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம் (சிலாபம்),
இல. 79, மாறவில வீதி,
நாத்தாண்டி.

7-97

---

## ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(குருநாகல் கிளை)-நிஸ்ஸங்க ஆராச்சிகே விக்கிரம நிஸ்ஸங்க

ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் 2007, மே 24 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

"நிஸ்ஸங்க ஆராச்சிகே விக்கிரம நிஸ்ஸங்க என்பவர், கடப்பாடுடையவராக, ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் சார்பில் குருநாகல் பிரசித்த நொத்தாரிசு எஸ். எஸ். ஹேவபதிரான என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2002, செத்தெம்பர் 04 ஆந் திகதிய 176 ஆம் இலக்க முறி மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலாலும், 2007, ஏப்பிறல் 30 ஆந் திகதியன்று உள்ளவாறாக, ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறி மீது நாலு இலட்சத்து முப்பத்தையாயிரத்து நூற்றிஐம்பத்திநாலு ரூபா (ரூ. 4,35,154) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாதலாலும், அத்துடன் ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 176 ஆம் இலக்க முறி மூலம் ஹட்டன் நாஷனல் வங்கி லிமிடெட் தாபனத்துக்கு ஈடுவைக்கப் பட்டனவுமான ஆதனமும் வளவுகளும், சொல்லப்பட்ட நாலு இலட்சத்து முப்பத்தையாயிரத்து நூற்றிஐம்பத்திநாலு ரூபா (ரூ. 4,35,154) பணத்தொகையை, 2007, மே 1 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள் வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனைகாரர் என். எச். பி. எவ். ஆரியரத்ன என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், மஹாகல்போத மெகொட கோறளை வெயுடவில்லி ஹத்பற்றுவில், மில்லாவ கிராமத்தில் அமைந்துள்ளதும் "பண்டாரவத்தை" என அழைக்கப் படுவதுமான காணியிலிருந்து உரிமம்பெற்ற நில அளவையாளர் எம். டபிள்யூ. ஆரியரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 1998, மே 30 ஆந் திகதிய 98/279 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் காணித்துண்டு 7 என அடையாளமிடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதிலுள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட வரைபடத்தின் பிரகாரம் அச்சொல்லப்பட்ட காணித்துண்டு 7 இன் எல்லைகள்- வடக்கு : சொல்லப்பட்ட வரைபடத்திலுள்ள காணித் துண்டுகள் 4, 5, 6, 6D4 மற்றும் 6D3 ; கிழக்கு : வீதி ; தெற்கு : 1491 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டுகள் 78 மற்றும் 74 ; அத்துடன் மேற்கு : 1491 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித் துண்டுகள் 77, அத்துடன் பதினெட்டு தசம் ஆறு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 18.6பே.) விஸ்தீரணம் கொண்டதும் குருநாகல் மாவட்ட காணிப்பதிவகத்தில் தொகுதி பக்கம் ஏ 1431/177 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதும் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எம். டபிள்யு. ஆரியரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 98/279 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டுகள் 6C மற்றும் 6D4 என அடையாள மிடப்பட்ட காணியின் மீதும் அதன் வழியாகவும் உள்ள பாதையுரிமை யுடனும் சேர்த்து.

அந்தச் சொல்லப்பட்ட காணித்துண்டு 7, உரிமம்பெற்ற நில அளவையாளர் எம். டபிள்யு. ஆரியரத்ன என்பவரால் தயாரிக்கப் பட்ட 115/2002 ஆம் இலக்க வரைபடத்திலும் காட்டப்பட்டுள்ளது. அத்துடன் அது பின்வருமாறு விவரிக்கப்படுகிறது :-

வடமேல் மாகாணம், குருநாகல், மாவட்டம், மஹாகல்போத மெகொட கோறளை வெயுடவில்லி ஹத்பற்றுவில், மில்லாவ கிராமத்தில் அமைந்துள்ளதும் "பண்டாரவத்தை" என அழைக்கப் படுவதுமான காணியிலிருந்து காணித்துண்டு 1 என அடையாள மிடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும், சொல்லப்பட்ட வரைபடத்தின் பிரகாரம் அச்சொல்லப்பட்ட காணித்துண்டு 1 இன் எல்லைகள் - வடக்கு : 4, 5, 6D3மற்றும் 6D4,கிழக்கு : வீதி தெற்கு : உரிமம்பெற்ற நிலஅளவையாளர் டபிள்யு. டி. பி. றெஜினால்ஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1491 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டுகள் 74 மற்றும் 78 ; மேற்கு ; உரிமம்பெற்ற நிலஅளவையாளர் டபிள்யு. டி. பி. றெஜினால்ஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1491 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டு 77 அத்துடன் பதினெட்டு தசம் ஆறு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 18.6பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. (சட்டம்) /சபைச் செயலாளர்.

7-135/3

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**1995 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8 அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 4.45 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணி வரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் "சுப்றீம் கோட்" புறொடக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 51 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 51 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 504 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 1,008 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும், கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **1995 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 1,612.00 | 2,098.00 |
| II ஆவது பகுதி தொடக்கம் VI பகுதி வரை தனிப்பகுதி | 572.00 | 745.00 |
| I வது பிரிவு | 520.00 | 1,007.00 |
| II வது பிரிவு (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆதியன) | 624.00 | 1,009.00 |
| III வது பிரிவு | 468.00 | 907.00 |
| அதிவிசேட விசேட வர்த்தமானி | 3,360.0 | 4,422.00 |

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | விலை ரூ. ச. | அஞ்சற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|---|
| (அ) | I வது பகுதி | 31.00 | 5.00 |
| | II வது பகுதி தொடக்கம் VI பகுதி வரை ஒவ்வொரு பகுதியும் | 11.00 | 5.00 |
| (ஆ) | I வது பிரிவு | 10.00 | 5.00 |
| | II வது பிரிவு | 12.00 | 5.00 |
| | III வது பிரிவு | 9.00 | 5.00 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், 32, லோட்ஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* ***அரசாங்க பிரசுராலய அதிபர், 32, லோட்டஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தா பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

***முக்கிய கவனிப்பு.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதையும் கவனத்திற் கொள்க.***

**அட்டவணை-2007**

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூலை** | .. | வெள்ளி | 06.07.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.06.2007 |
| | | வெள்ளி | 13.07.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.06.2007 |
| | | வெள்ளி | 20.07.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.07.2007 |
| | | வெள்ளி | 27.07.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.07.2007 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 03.08.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.07.2007 |
| | | வெள்ளி | 10.08.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.07.2007 |
| | | வெள்ளி | 17.08.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.08.2007 |
| | | வெள்ளி | 24.08.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.08.2007 |
| | | வெள்ளி | 31.08.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.08.2007 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 07.09.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.08.2007 |
| | | வெள்ளி | 14.09.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.08.2007 |
| | | வெள்ளி | 21.09.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.09.2007 |
| | | வெள்ளி | 28.09.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.09.2007 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2007, சனவரி 01.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.